DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 541/2019

PROSECUTION WITNESS L.W.6/P.W.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில்குமார் | தகப்பனார் பெயர் | தங்கவேல் |
| கிராமம் | | ஊர் | ஈரோடு |
| தொழில் | உதவி ஆய்வாளர் | வயது | |

**எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 12.05.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு மாவட்டம், தனிப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 29.11.2018 ம் தேதி, 18.45 மணிக்கு தாலுக்கா காவல் உதவி ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது விக்னேஷ் என்பவரை சந்திரசேகர், கார்த்தி மற்றும் மௌளீஸ்வரன் ஆகியோர்கள் ஆஜர் படுத்தி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று குற்ற எண்.735/2018 சட்டபிரிவு 379 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை வாதியின் அசல் புகாருடன் இணைத்து குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 க்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். **(புகார் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3) அன்னைற தினமே 19.05 மணிக்கு சம்பவம் இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் நவீன், நடராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.05.12 17:13:49 +0530

4) வழக்கு சாட்சிகள் மௌலீஸ்வரன், சந்திரசேகர், கார்த்திக், நவீன், நடராஜ் ஆகிய சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் மீண்டும் நிலையம் வந்து எதிரியை விசாரிக்க தனது பெயர், விலாசங்களை கூறி குற்றத்தை ஒப்புக் கொண்டவரை கைது செய்து , எதிரி சட்டை பாக்கெட்டியில் இருந்து எடுத்து ஆஜர்படுத்திய கோல்டு கலர் லேனோவா செல்போன் படிவம் 91 ன் மூலம் சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றினேன். **(படிவம் 91 அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (கோல்டு கலர் லேனோவா செல்போன் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டபிரிவு 379 இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் சொன்ன நாள், நேரத்தில் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றாலும், சரிவர புலன் விசாரணை செய்யாமல் புள்ளி விவரங்கள் கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை**

**இல்லை.**

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.05.12 17:13:54 +0530

Judicial Magistrate No.I,
Erode.